# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு –மதிப்பீட்டுத் தாள்
# 2020 – 2021
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 10

சுட்டெண்:...............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. வல்லினமெய் எழுத்துகள்

அ) 6 ☐ ஆ) 18 ☐

இ) 12 ☐ ஈ ) 5 ☐

2. சேரன் செங்குட்டுவன் இளவேனிற் காலத்தில் ________ காணப் புறப்பட்டான்.

அ) மலைவளம் ☐ ஆ) காட்டுவளம் ☐

இ) நாட்டுவளம் ☐ ஈ ) கடல்வளம் ☐

3. மாந்த நாகரிகமும் உலகின் முதன் மொழியும் தோன்றிய இடம்

அ) அமெரிக்காக்கண்டம் ☐ ஆ) குமரிக்கண்டம் ☐

இ) அவுத்திரேலியாக்கண்டம் ☐ ஈ ) ஐரோப்பாக்கண்டம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. ஒவ்வொரு தமிழ்ச்சொல்லுக்கும் வேர்ச்சொல் உண்டு எனக் கூறியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) தனிநாயகம் அடிகள் ☐

இ) பாரதியார் ☐ ஈ ) தேவநேயப்பாவாணர் ☐

5. செவ்வாய் என்பது

அ) தனிமொழி ☐ ஆ) பொதுமொழி ☐

இ) தொடர்மொழி ☐ ஈ ) பழமொழி ☐

TEDC

6. பொருட்களின் பெயர்களைக் குறிக்கும் சொல்

அ) வினைச்சொல் ☐ ஆ) பெயர்ச்சொல் ☐

இ) உரிச்சொல் ☐ ஈ ) இடைச்சொல் ☐

7. ‘ஊ’ எனும் ஓர் எழுத்துச்சொல் குறிப்பது

அ) இறைச்சியை ☐ ஆ) தலைவனை ☐

இ) இலையானை ☐ ஈ) அம்பை ☐

8. காரண இடுகுறிப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வாள் ☐ ஆ) நாற்காலி ☐

இ) மண்வெட்டி ☐ ஈ) பந்து ☐

9. அமைதியின் வெற்றி என்ற கருத்தைக் குறிக்கும் பழமொழி

அ) பதறாத காரியம் சிதறாது ☐

ஆ) நிறைகுடம் தளம்பாது ☐

இ) தன்வினை தன்னைச்சுடும் ☐

ஈ) சிறுதுளி பெருவெள்ளம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

10. பிறவினை விகுதிகள்

அ) தி.வி ☐ ஆ) கி.பி ☐

இ) கி.மி ☐ ஈ) வி.பி ☐

11. தேத்தண்ணி என்ற பேச்சு வழக்குச் சொல்லின் செவ்வழக்கு

அ) தேத்தண்ணீர் ☐ ஆ) தேனீர் ☐

இ) தேநீர் ☐ ஈ) தேத்தண்நீர் ☐

12. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகளில் ஒன்று

அ) காவிரி ☐ ஆ) பஃறுளி ☐

இ) கங்கை ☐ ஈ) கோதாவரி ☐

TEDC

13. குணப்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) ஈழம் ☐ ஆ) கருமை ☐

இ) காலை ☐ ஈ) ஆடுதல் ☐

14. மலர்களில் தேன் அருந்தும் வண்டினங்கள்

அ) முழங்குகின்றன ☐ ஆ) சீறுகின்றன ☐

இ) உறுமுகின்றன ☐ ஈ) முரல்கின்றன ☐

15. காவரியாறு மெல்லச் சலசலத்துப் பாய்கிறது. இதில் சலசல என்பது

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

16. மீன் வடிவ யாழ்

அ) மகரயாழ் ☐ ஆ) பேரியாழ் ☐

இ) வில்யாழ் ☐ ஈ) செங்கோட்டுயாழ் ☐

17. பழந்தமிழர் கழகம் அமைத்து வளர்த்தனர். இச்சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) பயனிலை ☐ ஆ) எழுவாய் ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

TEDC

18. வளையல் என்பது

அ) காரணஇடுகுறிப்பெயர் ☐ ஆ) காரணப்பெயர் ☐

இ) இடுகுறிப்பெயர் ☐ ஈ) பொதுப்பெயர் ☐

19. தேவநேயப்பாவாணர் பிறந்த ஊர்

அ) நாஞ்சில் ☐ ஆ) எட்டயபுரம் ☐

இ) தகடூர் ☐ ஈ) புறக்கடையான்பட்டி ☐

20. மாந்தரைக் குறிக்கும் சொல் உயர்திணை. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள உருபு

அ) கு ☐ ஆ) அது ☐

இ) ஐ ☐ ஈ) ஆல் ☐

21. பரிதிமாற் கலைஞர் என்று தமது பெயரைத் தமிழில் மாற்றியவர்

அ) சூரியநாராயண சாத்திரிகள் ☐ ஆ) கனக சுப்புரத்தினம் ☐

இ) சுவாமி வேதாசலம்பிள்ளை ☐ ஈ) தேவநேசன் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

22. பழனம், கழனி என்ற சொற்கள் உணர்த்தும் ஒரு சொல்

அ) வீடு ☐ ஆ) வயல் ☐

இ) கோவில் ☐ ஈ) பள்ளி ☐

23. மண் + குடம்

அ) மண்குடம் ☐ ஆ) மட்குடம் ☐

இ) மக்குடம் ☐ ஈ) மட்க்குடம் ☐

TEDC

24. 'வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலை' என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல்

அ) திருக்குறள் ☐ ஆ) புறநானூறு ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) பரிபாடல் ☐

25. ________________ எழுதாப்பாடல்கள் என அழைக்கப்படுகின்றன.

அ) நாட்டார்பாடல்கள் ☐ ஆ) புதுக்கவிதைகள் ☐
இ) செய்யுள்கள் ☐ ஈ) விடுகதைகள் ☐

26. ஒரே எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் வரும் நிறுத்தற் குறி

அ) காற்புள்ளி ☐ ஆ) அரைப்புள்ளி ☐
இ) முக்காற்புள்ளி ☐ ஈ) முற்றுப்புள்ளி ☐

27. அவுத்திரேலியா, ஆபிரிக்கா ஆகிய பெருநிலப்பரப்புகள் தனித்தனியாகப் பிரிந்து போனதற்கான காரணம்

அ) கடற்கோள் ☐ ஆ) அரசியல் ☐
இ) போர் ☐ ஈ) நோய் ☐

28. பழமொழி:
தன்வினை தன்னைச் சுடும். இப்பழமொழி உணர்த்தும் கருத்து

அ) வினை விடாது ☐ ஆ) ஆராய்ந்து செய் ☐
இ) அறிவின் அடக்கம் ☐ ஈ) முயற்சியின் பயன் ☐

29. கூடினர் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) ட் ☐ ஆ) இன் ☐
இ) அர் ☐ ஈ) ன் ☐

30. உவமைத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) வாய்ப்பவளம் ☐ ஆ) மலைவீழருவி ☐
இ) உயிரும் உடலும்போல ☐ ஈ) கயல்விழி ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தனக்கென்று தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழர்மரபு. தமிழரின் பண்பாட்டுக் கூறுகளும் கலைகளும் இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பண்டைத் தமிழன் வாளாண்மையால் பகைவரை வென்றான். வீரமும் தீரமும் நிறைந்த விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினான். தமிழருக்குரிய வீரஞ் செறிந்த விளையாட்டுகளை அறியுந்தோறும் வியப்பு மேலிடுகிறது. ஏறுதழுவுதல், சிலம்பாட்டம், இளவட்டக்கல் தூக்குதல், மற்போர் முதலான விளையாட்டுகள் தமிழர்களின் வீர விளையாட்டுகளாக விளங்குகின்றன. இவ்விளையாட்டுகளில் இன்றளவும் நடைமுறையிலுள்ள வீர விளையாட்டுகளில் ஒன்று ஏறுதழுவுதல். ஏறு என்பது காளைமாட்டைக் குறிக்கும். ஏறுதழுவுதல் என்றால் காளையின் வீரத்தை அடக்குவதாகும். இவ் விளையாட்டு பழங்காலந்தொட்டு இன்று வரை விளையாடப்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு சல்லிக்கட்டு என்றும் அழைக்கப்படுகிறது. வளமான புல்வளம் கொண்ட முல்லைநிலமே ஏறுதழுவுதலுக்கு உகந்த நிலமாக விளங்கியது. பொங்கல் விழா கொண்டாடப்படும் நாட்களில் ஏறுதழுவுதல் என்னும் இவ்விளையாட்டு மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

1. தமிழரின் பண்பாட்டுக்கூறுகளும் கலைகளும் எவற்றின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன?

______________________________________________

______________________________________________

2. தமிழரது வீர விளையாட்டுகள் எவை?

______________________________________________

______________________________________________

3. ஏறுதழுவுதல் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

4. தமிழர்மரபு எப்படிப்பட்டது?

______________________________________________

______________________________________________

5. ஏறுதழுவுதலுக்கு உகந்த நிலம் எது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இந்தியா முழுவதும் தமிழ் நாடாக இருந்த பொழுது அதன் பெயர் என்ன?

_______________________________________________

_______________________________________________

2. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை வடிக்க, எங்கிருந்து கல் எடுத்து வந்தான்?

_______________________________________________

3. தமிழ் ஞாலமொழி என நிறுவியவர் யார்?

_______________________________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. மருத நிலத்தில் ஆடலைத் தலைநிமிர்ந்து பார்ப்பவை எவை எனக் கவிஞர் கூறுகிறார்?

_______________________________________________

5. ஊடகப்பொறிகள் யாவை?

_______________________________________________

_______________________________________________

6. தேவநேயப்பாவாணர் எழுதிய ஆய்வு நூல்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

TEDC

7. "தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்க...."

இப்பாடலைப் பாடியவர் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

**4. தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி கவிதையை முழுமையாக்குக.**

## மாவீரரே

| வாழ | நாங்களும் | தாய்மண்ணும் |
|---|---|---|
| வீழ்ந்து | பகைமையை | |

விடுதலைப் பாதையில் விரைந்து நடந்தீரே

விடுதலைக்காய் ________________ மடிந்தீரே

நெஞ்சில் விடுதலைக் கனவைச் சுமந்தீரே

நெருப்பினில் ஆடியும் மெய் இழந்தீரே

கொடும் ________________ ஒழிப்பதே

கொள்கை எனக் கொண்டீரே

மற்றவர் ________________ உம் வாழ்வைத் துறந்தவரே

மண்ணிலே புதைந்து விதையாகிப் போனவரே

உங்களைப் புதைத்த ________________ உறங்காதே

உரிமைகள் பெறும்வரை ________________ ஓயோமே

எங்களின் தாயகம் விடிவு பெறும்

ஏற்றிய கொடியுடன் ஆட்சி பெறும்

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? ________

   ஆ. மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் எத்தனை? ________

   இ. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? ________

2. பின்வரும் சொல்லியங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   ஏவற் சொல்லியம் ________________

   வியங்கோள் சொல்லியம் ________________

3. எடுத்துக்காட்டுகள் தருக.

   வினையாலணையும் பெயர் ____________

   குறிப்பு வினை ____________

   தன்வினை ____________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுக.

   நடந்தான், பார்க்கிறேன், விளையாடுகின்றீர்கள், எழுதுகின்றாய், உழுகின்றோம், படிக்கின்றார்கள்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |

5. பின்வரும் சொற்களை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

   1. கன்னங்கரிய ________________

   2. சின்னஞ்சிறிய ________________

TEDC

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**சமய நம்பிக்கை ஒவ்வொரு மாந்தனுக்கும் இன்றியமையாதது. சமய நம்பிக்கை இருந்தால்தான் மாந்தன் மாந்தனாக வாழமுடியும். நாம் வாழவும் பிறர் வாழவும் சமயமே வழிகாட்டுகிறது. சமயங்கள் பலவகைப் பட்டாலும் எல்லாமே நல்லனவற்றையே கூறுகின்றன. சமயங்கள் காட்டும் வழிமுறைகளை அறிந்து நடப்பவர்கள் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யமாட்டார்கள். நாம் எக்காலத்திலும் இன்பமாக வாழ சமயம் உதவுகிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் சமயங்களைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ்வோம்.**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ சேரமான் வஞ்சினம்
- ✸ கடல் கொண்ட தமிழகம்
- ✸ மழை ( மழையினால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்)

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC